**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 394** **நாள் : 21.11.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுநாள்வரை 65,422 செல்லப்பிராணிகள் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 24,477 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.**

**செல்லப்பிராணிகளுக்கான உரிமம் பெறுவதற்கான காலக்கெடு 07.12.2025 வரை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெருநாய்கள் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்திடும் வகையில் அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்துதல், மைக்ரோசிப் பொருத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், தெருநாய்கள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு (நாய்கள் மற்றும் பூனைகள்) மைக்ரோசிப் செலுத்துதல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த மேலாண்மைக்காக மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு மேயர் அவர்களால் 03.10.2025 அன்று தொடங்கப்பட்டது. இந்த இணையதள சேவையானது, செல்லப் பிராணிகள் மற்றும் தெருநாய்களின் தடுப்பூசி விவரங்கள் மற்றும் மீண்டும் அடுத்த தவணை தடுப்பூசி செலுத்த வேண்டிய தேதிகளை திறம்பட கண்காணிக்க உதவுகிறது.

செல்லப்பிராணிகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடிநோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும், இந்த

தடுப்பூசி செலுத்தப்பட்ட நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு மட்டும் உரிமம் செல்லத்தக்கது என்பதை உறுதிப்படுத்தி மீண்டும் உரிமம் புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்யவும், செல்லப்பிராணிகள் கைவிடப்படுவதை (Pet Abandonment) தடுப்பதற்காகவும் செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோ சிப் செலுத்  உரிமம் பெறுவது பெருநகர சென்னை மாநகராட்சியில்  கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த மைக்ரோ சிப்பில் செல்லப்பிராணிகளின் உரிமையாளரின் பெயர், முகவரி உள்ளிட்ட தரவுகள் பதிவு செய்யப்படும்.

செல்லப்பிராணிகளுக்கான மைக்ரோசிப் பொருத்தும் பணி அனைத்தும் தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பேரவையில் (Tamilnadu State Veterinary Council) பதிவுசெய்யப்பட்ட கால்நடை மருத்துவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதள மென்பொருளில் பட்டியலிடப்பட்டுள்ள தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளிலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் செல்லப்பிராணிகளுக்கான மருத்துவமனைகளிலும் மேற்கொள்ளப்படுகிறது.

செல்லப்பிராணிகள் வளர்ப்பவர்களின் வசதிக்காகவும், உரிமம் பெறுவதற்கும், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, செல்லப் பிராணிகளுக்கு மைக்ரோசிப் பொருத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் 08.10.2025 அன்று முதல் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்திலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இதுவரை 65,422 செல்லப்பிராணிகள் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 24,477 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

செல்லப் பிராணிகள் உரிமையாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில், இணையதள சேவையில் காணப்பட்ட இடர்பாடுகள் களையப்பட்டு எளிதாக உரிமம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், செல்லப்பிராணிகள் உரிமையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் செல்லப்பிராணிகளுக்கான உரிமம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 23.11.2025 என்ற காலக்கெடுவானது, தற்போது 07.12.2025 வரை மேலும் 14 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் திரு.வி.க. நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாப்பேட்டை, மீனம்பாக்கம் ஆகிய 6 செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், சோழிங்கநல்லூர் நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்திலும் மைக்ரோ சிப் பொருத்துதல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்துதல், உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் ஞாயிற்றுக்கிழமை உட்பட வாரத்தின் அனைத்து நாட்களிலும் தினசரி காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை மேற்கொள்ளப்படும்.

எனவே, செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் இதனைப் பயன்படுத்தி 07.12.2025க்குள் தங்களின் செல்லப் பிராணிகளுக்கான உரிமத்தைப் பெற்றிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**